
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 157 | 4 Pages | 4.1.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 157 | 4 பக்கங்கள் | 4.1.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்**

**விளக்கம்:** நோய் மிகுந்த உடம்புடன் வறுமையான தீய வாழ்க்கை உடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கினவர் என்று அறிஞர் கூறுவர்.

## GPS கருவியால் டெல்லி ஏர்போர்ட்டில் ஸ்காட்லாந்து பெண் கைது.. இந்த கருவியை இந்தியா தடை செய்தது ஏன்?



டெல்லி, ஜன.4

இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஜிபிஎஸ் கருவியை எடுத்துச் சென்றதற்காக ஸ்காட்லாந்தை சேர்ந்த மலையேறுபவர் டெல்லி விமான நிலையத்தில் கைது செய்யப் பட்டுள்ளார்.

ரிஷிகேஷ் நோக்கிச் சென்ற ஹீதர், இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டார். அவரிடம் இருந்து கார்மின் இன்ரீச் ஜிபிஎஸ் ஒன்று மீட்கப்பட்டது. கைது செய்யப்படுவதற்கு முந்தைய தனது இன்ஸ்டாகிராமில் பதிவில், ஹீதர் நடந்ததை விவரித்தார்.

என்ன நடந்தது?

"நான் ஸ்கேனர் வழியாக சோதனைக்கு என் கார்மின் இன்ரீச்சை ட்ரேயில் வைத்தேன், அந்த நேரத்தில் நான் உடனடியாக அதிகாரிகளால் ஓரமாக காத்திருக்க வைக்கப்பட்டேன்.

என்ன நடக்கிறது என்று யோசித்துக்கொண்டு காத்திருந்தேன். கார்மின்[ ஜிபிஎஸ்] இங்கே சட்டவிரோதமானது என்றும் அவர்கள் என்னை காவல் துறையிடம் ஒப்படைக்கிறார்கள் என்றும் எனக்கு இறுதியில் சொல்லப் பட்டது என்று ஹீதர் விவரிக்கிறார். மேலும் தனது நாட்டு தூதரகத்தையும் தொடர்புகொண்டதாக அவர் அதில் தெரிவித்தார்.

கார்மின் இன் ரீச்

இந்த கார்மின் இன்ரீச் கருவியை சுவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. 1885 ஆம் ஆண்டின் இந்திய தந்தி சட்டம் மற்றும் 1933 ஆம் ஆண்டின் வயர்லெஸ் டெலிகிராபி சட்டம் ஆகியவற்றின் கீழ் அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி, கார்மின் இன்ரீச் போன்ற செயற்கைக்கோள் தகவல் தொடர்பு [ஜிபிஎஸ்] சாதனங்களைப் பயன்படுத்துவதை இந்தியா தடை செய்துள்ளது.

இந்த பழைய விதிமுறைகள் 2008 மும்பை பயங்கரவாதத் தாக்குதலின் போது வலுப்படுத்தப்பட்டன.

பாதுகாப்பு அபாயங்கள் மற்றும், உளவு பார்த்தலை தடுக்கவும், செயற்கைக்கோள் தொடர்பு தொழில்நுட்பத்தை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதை தடுக்கவும் இந்த தடையானது விதிக்கப்படுகிறது.

இந்தியா, அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், கியூபா, ஜார்ஜியா, ஈரான், வட கொரியா, மியான்மர், சூடான், சிரியா, தாய்லாந்து, வியட்நாம், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய 14 நாடுகளால் இந்த கருவி தடை செய்யப்பட்டுள்ளது.

## வார இறுதி நாளில் வீழ்ச்சியை சந்தித்த மும்பை பங்குச் சந்தை சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி

மும்பை, ஜன.4

மும்பை பங்குச் சந்தை சென்செக்ஸ் 720.60 புள்ளிகள் குறைந்து இன்று வர்த்தகம் நிறைவடைந்தது. நேற்றைய வர்த்தகத்தில் 1,436.30 புள்ளிகள் உயர்ந்திருந்தது.

நேற்று வர்த்தகம் சென்செக்ஸ் 79,943.71 புள்ளிகளில் நிறைவடைந்த நிலையில் இன்று காலை சுமார் 130 புள்ளிகள் உயர்ந்து வர்த்தகம் 80,072.99 புள்ளிகள் தொடங்கியது. இன்று அதிகபட்சமாக சென்செக்ஸ் 80,072.99 புள்ளிகளிலும், குறைந்தபட்சமாக சென்செக்ஸ் 79,109.773 புள்ளிகளிலும் வர்த்தகமானது. இறுதியாக சென்செக்ஸ் 720.60 புள்ளிகள் வீழ்ச்சி கண்டு 79,223.11 புள்ளிகளில் வர்த்தகம் நிறைவடைந்தது.

இந்திய பங்குச் சந்தை நிஃப்டி

இந்திய பங்குச் சந்தை நிஃப்டி 445.75 புள்ளிகள் உயர்ந்து 24,188.68 புள்ளிகளில் வர்த்தகம் நிறைவடைந்தது. இன்று காலை சுமார் 8 புள்ளிகள் உயர்ந்து நிஃப்டி 24196.40 புள்ளிகளில் வர்த்தகம் தொடங்கியது. இன்று அதிகபட்சமாக நிஃப்டி 24,196.45 புள்ளிகளிலும், குறைந்தபட்சமாக நிஃப்டி 23,976.00 புள்ளிகளிலும் வர்த்தகமானது. இறுதியாக 183.90 புள்ளிகள் சரிந்து நிஃப்டி 24,004.75 புள்ளிகளில் வர்த்தகம் நிறைவடைந்தது.

ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரிஸ், இந்துஸ்தான் யுனிலிவர், பஜாஜ் பைனான்ஸ், மாருதி சுசுகி, கோடக் மஹிந்திரா பேங்க், என்.டி.பி.சி., டைட்டன், பவர்கிரிட் கார்ப், டாடா மோட்டார்ஸ், பஜாஜ் பின்செர்வ், நெஸ்ட்லே இந்தியா, டாடா ஸ்டீல், இந்துஸ்இண்ட் பேங்க் பங்குகள் ஏற்றம் கண்டன.

டெக்மஹிந்திரா, ஆசியன்பெயிண்ட்ஸ், அதானி போர்ட்ஸ், சொமேட்டோ, ஆக்சிஸ் பேங்க், அல்ட்ராடெக் சிமெண்ட், மஹிந்திரா அண்டு மஹிந்திரா, சன் பார்மாசெயுட்டிகள், எல் அண்டு டி, ஹெச்.சி.எல். டெக்னாலாஜிஸ், ஐ.டி.சி., எஸ்.பி.ஐ., இன்போசிஸ், ஐசிஐசிஐ பேங்க், பாரதி ஏர்டெல், ஹெச்.டி.டிஃப்.சி பேங்க், டி.சி.எஸ். பங்குகள் சரிவை சந்தித்தன. டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 9 பைசா வீழ்ச்சியடைந்து 85.73 ரூபாயக உள்ளது.

## இன்ஸ்டாகிராம் நேரலையில் இளம்பெண் தூக்கிட்டு தற்கொலை.. அதிர்ச்சியில் உறைந்த பார்வையாளர்கள்

சத்தீஸ்கர், ஜன.4

சத்தீஸ்கரில் இன்ஸ்டாகிராம் லைவ் நேரலையில் 19 வயது இளம்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சத்தீஸ்கரில் உள்ள ஜான்ஜ்கிரில் 19 வயது பெண் அங்கூர் கடந்த டிசம்பர் 29 அன்று, இன்ஸ்டாகிராம் லைவ் ஸ்ட்ரீமிங் செய்து கொண்டிருந்தார்.

அவரது நேரலையை சுமார் 20க்கும் அதிகமானோர் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அங்கூர் நேரலையிலேயே தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள முயன்றார். நேரலையை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அவரது செல்போனுக்கு போன் அவரை செய்து தடுக்க முயன்றனர். சிலர் அவர் இருந்த இடத்துக்கு நேரில் விரைந்தனர். ஆனால் அவர்கள் வருவதற்குள் அங்கூர் தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்திருந்தார். போலீஸ் விசாரணையில் அங்கூர் சத்தீஸ்கரில் உள்ள மிஸ்தா கிராமத்தில் வசிப்பவர் என்றும், அவரது பெற்றோர் ஐதராபாத்தில் தினசரி கூலித் தொழிலாளர்களாகவும் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும் தெரிய வந்தது. முதற்கட்ட விசாரணையில் அவர் காதலில் ஏற்பட்ட மன உளைச்சலால் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. அங்கூர் தனது மொபைல் போனில் நீண்ட நேரம் செலவிடுவார் என்று அவரது கிராம மக்கள் சுட்டிக்காட்டினர். அங்கூரின் செல்போனை சைபர் செல் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

தற்கொலை எதற்கும் தீர்வாகாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டி உள்ளது. தற்கொலை எண்ணங்களிலிருந்து விடுபட உதவிக்கு 044 2464 0050 என்ற எண்ணை அழைக்கவும்.

# விளையாட்டுத் துறையில் சாதனை படைப்போரின் எண்ணிக்கை உயர வேண்டும்: மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜன.4

விளையாட்டு வீரர்களுக்கான மத்திய அரசின் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர் குகேஷுக்கு கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், அர்ஜுனா விருதுக்கான பட்டியலில் துளசி மதி, மனிஷா, நித்யஸ்ரீ ஆகிய 3 தமிழக வீராங்கனைகள் இடம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், கேல்ரத்னா விருது, அர்ஜுனா விருதுகளை பெற்ற தமிழக வீரர் வீராங்கனைகளுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில்,

"தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையின் வளர்ச்சியை உலக அரங்கில் உயர்த்திப்பிடித்தநம்சாதனை வீரர்களுக்கு மத்திய அரசின் விருதுகள் வழங்கப்பட்டிருப்பதில் மகிழ்ச்சி அளிக்கிறது. கேல் ரத்னா விருது பெற்ற குகேஷ், அர்ஜுனா விருது பெற்ற துளசிமதி, நித்யஸ்ரீ, மனிஷா ராமதாஸ் ஆகியோருக்கு என் வாழ்த்துகள்.

வெற்றிகள் தொடரட்டும்!. தமிழ்நாட்டில் இருந்து சாதனை படைப்போரின் எண்ணிக்கை வருங்காலங்களில் உயர்ந்துகொண்டே இருக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.



# பொங்கல் பரிசு தொகுப்பை உரிய காலத்தில் வழங்க வேண்டும்: அமைச்சர் அறிவுறுத்தல்

சென்னை, ஜன.4

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தலைமையில் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் தலைமைச் செயலகத்தில் இன்று (02.01.2025) நடைபெற்றது. இதில் முதல்அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள பொங்கல் பரிசுத் தொகுப்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நகர்வு செய்யப்படும் பச்சரிசி மற்றும் சர்க்கரையின் தரத்தினை உறுதி செய்திடுமாறு அமைச்சர் அறிவுறுத்தினார்.

கரும்பின் நுனியிலிருக்கும் தோகையினை வெட்டாமல் முழுக்கரும்பையும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட கூட்டுறவுத்துறையினருடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார். மேலும், பொதுவிநியோக அங்காடிகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு மற்றும் விநியோகத்தின் நிலையினை மாநிலம் முழுவதும் கண்காணித்து, உடனுக்குடன் குறித்த காலத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்துப் பொருட்களும் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்திடவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

புதிய குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பங்களை உடனுக்குடன் பரிசீலித்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் குடும்பங்களுக்கு, புதிய குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கிடவும், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கேற்ப தேவைப்படும் இடங்களில் புதியதாக நியாய விலைக்கடைகளை திறந்திடவும் அறிவுறுத்தினார்.

புதிய சேமிப்புக்கிடங்குகள் கட்டுவதற்கு தகுதியான நிலங்களைத் தேர்வு செய்திடுமாறு தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிர்வாக இயக்குனர்களை கேட்டுக்கொண்டார்.



குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத்துறை அலுவலர்கள் பொதுவிநியோகத்திட்டப் பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கலைத் தடுப்பதற்கு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாராட்டியும், எல்லையோர அண்டை மாநிலங்களின் அலுவலர்களுடன் இணைந்து கலந்தாய்வுக்கூட்டங்கள் மேற்கொண்டு அரிசிக் கடத்தலை முற்றிலுமாக ஒழித்திடுமாறும் அறிவுறுத்தினார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் கூட்டுறவுத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து அமைச்சர் அறிவுறுத்தியபடி பொங்கல் பரிசுத் தொகுப்பினை குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய காலத்தில் தரத்துடன் வழங்கப்படுவதை உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொண்டார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசுப் பள்ளிகளை தனியாருக்கு தாரை வார்ப்பதாக பரவும் தகவல் தவறானது: அமைச்சர் அன்பில் மகேஸ்



சென்னை, ஜன.4

500 அரசுப் பள்ளிகளை தனியார் பள்ளிகளுக்கு தத்துக்கொடுப்பதாக தகவல் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் அரசுப் பள்ளிகளை தனியாருக்கு தாரை வார்த்து கொடுப்பதாக பரவும் தகவல் தவறானது என்று தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் விளக்கம் அளித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் அன்பில் மகேஸ் கூறியதாவது:

அரசுப் பள்ளிகளை தாரை வார்க்கிறோம் என்று பரவும் தகவல் தவறானது. அரசுப் பள்ளிகள் எங்கள் பிள்ளைகள்; அதை யாரும் தத்து கொடுக்கவில்லை. தவறுதலாக புரிந்து கொண்டு தாரை வார்ப்பு என விமர்சனங்கள் செய்கின்றனர். செய்திகளின் உண்மை தெரியாமலேயே அரசியல் கட்சியினர் கண்டனஅறிக்கைவெளியிடுகின்றனர்.

அரசுப் பள்ளி விவகாரத்தில் எனது தரப்பு விளக்கங்களை கேட்காமல், தேவையில்லாத பிரச்சினைகளை கிளப்பி, அவசர அவசரமாக கண்டனம் தெரிவிக்கிறார்கள். அரசுப் பள்ளிகளை தனியாருக்கு தாரை வார்ப்பதாக வெளியான செய்திகளை வன்மையாக கண்டிக்கிறேன். சிஎஸ்ஆர் நிதி மூலம் மட்டுமே அரசுப் பள்ளிகளை மேம்படுத்த தனியார் பள்ளிகள் முன்வந்தன. அரசுப் பள்ளிகளை தனியாருக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

கல்வி நிதி விவகாரத்தில் மத்திய அரசு நிதி கொடுக்காமல் கழுத்தை நெரிக்கிறது. மத்திய அரசின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் தான் நிதி தருவோம் என்று மிரட்டல் விடுக்கிறார்கள். எங்கள் கொள்கைகளில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றி விடுங்கள்; எங்கள் பிள்ளைகளை நாங்களே பார்த்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஜனநாயக ரீதியில் போராடுவோரின் குரல்வளையை நசுக்குவதுதான் திராவிட மாடலா? டி.டி.வி.தினகரன்



சென்னை, ஜன.4

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நீதிகேட்டு போராடும் எதிர் கட்சியினரை தொடர்ந்து கைது செய்வது கடும் கண்டனத்திற்குரியது என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நீதி வேண்டி சென்னை வள்ளுவர்கோட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவி ஒருவருக்கு நடைபெற்ற வன்கொடுமைச்சம்பவத்தை கண்டித்து கடந்த சில தினங்களுக்கு முன்பாக இதே வள்ளுவர்கோட்டத்தில் போராட முயன்ற பா.ஜ.க., நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளை கைது செய்த காவல் துறை, தற்போது பா.ம.க. வினரையும் வலுக்கட்டாயமாக கைது செய்து அடக்குமுறையை கையாண்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது கொரானோ காலகட்டத்திலும் கூட, தன் இருப்பைக் காட்டிக் கொள்வதற்காக தனது இல்லத்தில் தொடங்கி பல்வேறு இடங்களில் பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்து நாடகமாடிய மு.க.ஸ்டாலின், முதல்அமைச்சரான பின்பு, ஜனநாயக ரீதியிலான எதிர்க்கட்சிகளின் அறவழிப் போராட்டத்திற்குக்கூட அனுமதி மறுப்பதும், காவல்துறையை ஏவல்துறையாக பயன்படுத்தி அடக்குமுறையை கையாள்வதும்தான் தி.மு.க. கூறும் திராவிட மாடலா?

பாதிக்கப்பட்ட மாணவி அளித்த புகாரின்படி பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை பாதுகாப்பதிலோ, வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை கைது செய்யவோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காத தி.மு.க. அரசு, எதிர்க்கட்சித் தலைவர்களை ஒடுக்க நினைப்பதன் மூலம் வழக்கின் விசாரணையை மூடி மறைக்க முயற்சி செய்கிறதா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள பா.ம.க.வினர் அனைவரையும் எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிப்பதோடு, எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதில் செலுத்தும் கவனத்தை, பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்களைதடுத்து நிறுத்துவதிலும் செலுத்த வேண்டும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஏரிகள் முழுவதும் நிரம்பியதால் கிருஷ்ணா நீர் பெறுவது நிறுத்தம்



சென்னை, ஜன.4

சென்னையில் நாளை பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின்தடை செய்யப்படுகிறது. நாளை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி மின் தடை செய்யப்படும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

ஐயப்பன்தாங்கல்: காட்டுப்பாக்கம், செந்துராபுரம், ஸ்ரீநகர், விஜயலட்சுமி நகர், ஜானகியம்மாள்நகர், ஸ்வர்ணபுரி நகர், அடிஷன் நகர், சீனிவாசபுரம், கிருஷ்ணா நகர், மாருதி நகர், நோம்பல், மவுண்ட் பூந்தமல்லி சாலை, ஆயில் மில் சாலை, ஆட்கோ நகர், ஐயப்பன் தாங்கல், சுப்பையா நகர், கிருஷ்ணவேணி அம்மாள் நகர், வசந்தம் நகர், சிவராம கிருஷ்ணா நகர், விஜயலட்சுமி அவென்யூ.

கோவிலம்பாக்கம்: ராகவா நகர் (எஸ்.கொளத்தூர் மெயின் ரோடு), பால்வாடி, மேடவாக்கம் மெயின் ரோடு, கடப்பாக்கல், வைத்தியலிங்கம் நகர், ராஜிவி நகர் 6வது தெரு, அப்பல்லோவிடுதி, ஸ்ரீராம் பிளாட், ஏ.ஆர். பிளாட், நாஞ்சில் பிளாட், தினகரன் தெரு, மணியம்மை தெரு, வெள்ளக்கல் பஸ் ஸ்டாண்ட், கண்ணதாசன் தெரு, அண்ணா தெரு, பாரதி தெரு, காந்தி தெரு, பொன்னியம்மன் காலடி 1 முதல் 5வது தெரு, கலைஞர் நகர், வீரபாண்டி நகர் 1 முதல் 10வது தெரு, ராணி நகர், அம்பேத்கர் சாலை, முத்தையா நகர், விவேகானந்தர் தெரு, ராஜீவ் காந்தி நகர், பெருமாள் நகர் உள்ளிட்ட சில பகுதிகள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதை கண்டித்து குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் பெற்றோர்கள் போராட்டம்



தருமபுரி, ஜன.4

தருமபுரி மாவட்டம் சோகத்தூரில் ஊராட்சிக்கு உட்பட்ட ஆட்டுக்காரன் பட்டிகிராமத்தில்ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி செயல்பட்டு வருகிறது.

இந்த பள்ளியில் சுமார் 130க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

இதில் சில ஆசிரியர்கள் பள்ளியில் சரிவர பணியை செய்வதில்லை என்பது பெற்றோர்களுக்கு தெரிய வந்தது. உடனே அந்த ஆசிரியர்களை வேறு இடத்திற்கு மாற்ற செய்ய வேண்டும்கடந்தசிலநாட்களுக்கு முன்பு கல்வி துறை அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சரிவர பணி செய்யாத ஆசிரியர்களை தவிர 3 ஆசிரியர்களை மட்டும் வேறு பள்ளிக்கு இடமாற்றம் செய்து அதிகாரிகள் உத்தரவிட்டதாக தெரியவந்தது.

இதுகுறித்துதகவலறிந்த அந்த பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்த நிலையில் தருமபுரி மாவட்டத்தில் அரையாண்டு விடுமுறை முடிந்து இன்று பள்ளிகள் திறக்கப்பட்டன. இதற்காக மாணவர்கள் ஆர்வத்துடன் பள்ளிக்கு வந்தனர். ஆனால், ஆட்டுக்காரன் பட்டியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்கு மட்டும் மாணவர்கள் படிக்க யாரும் வரவில்லை. இதனால் பணியில் இருந்த ஆசிரி யர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அப்போது பள்ளியின் முன்பு மாணவர்களின் பெற்றோர்கள் திரண்டு வந்து திடீரென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்துதகவலறிந்த மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் தென்றல் உடனே சம்பவ இடத்திற்கு வந்து பெற்றோர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

அப்போது அதிகாரியிடம் பெற்றோர்கள், 3 ஆசிரியர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டதை கண்டித்து இன்று பள்ளிக்கு மாணவர்களை அனுப்பாமல் வகுப்பை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்தனர்.

மேலும், பணியிடமாற்றம் செய்யப்பட்ட 3 ஆசிரியர்களையும் மீண்டும் இதே பள்ளியில் பணியமர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

இதுகுறித்து அதிகாரி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இந்த சம்பவத்தால், அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# தமிழக பா.ஜ.க. தலைவராக மீண்டும் தேர்வாகிறார் அண்ணாமலை

சென்னை, ஜன.4

நாடு முழுவதும் பா.ஜ.க உட்கட்சித் தேர்தல் நடந்து வருகிறது. அதன்படி தமிழகத்திலும் கிளைகள் முதல் மாவட்டம் வரை நிர்வாகிகள் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக வருகிற 15ந் தேதிக்குள் புதிய மாநில தலைவரை தேர்வு செய்ய வேண்டும். அதற்கான பணிகள் தொடங்கி உள்ளது.

தற்போதைய தலைவர் அண்ணாமலை பதவிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் ஆகிறது. ஒருவர் தலைவர் பதவியில் இருமுறை இருக்கலாம். அந்த வகையில் மீண்டும் அண்ணாமலைக்கே வாய்ப்பு வழங்கலாம் என்று பேச்சு அடிபடுகிறது. அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டி உள்ளது. கடந்த தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமையாமல் போனதற்கு அண்ணாமலை தான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. எனவே அ.தி.மு.க.வுடன் இணக்கமாக செல்பவர்களை நியமிக்கலாமா என்றும் ஆலோசிக்கப்படுகிறது. அதன்படி டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் பெயரும் பரிசீலிக்கப்படுவதாக கட்சி வட்டாரத்தில் பேசப்படுகிறது. அகில இந்திய தலைவர் நட்டாவின் பதவி க்காலம் முடிவடைகிறது. புதிய தேசிய தலைவரையும் வருகிற 20ந் தேதிக்குள் தேர்வு செய்யப்பட வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் மாநில தலைவர் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட பிறகு மாநில தலைவர்கள், தேசிய செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து புதிய தேசிய தலைவரை தேர்ந்தெடுப்பார்கள்.

# பா.ஜ.க. மகளிரணி நீதியாத்திரை வாகன பேரணிக்கு அனுமதி மறுப்பு தடையை மீறி நடத்த முடிவு



மதுரை, ஜன.4

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவிக்கு நடந்த பாலியல் வன்கொமை அத்துமீறலை கண்டித்து அ.தி.மு.க., பா.ஜ.க. மற்றும் பல்வேறு எதிர்க்கட்சிகள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றன.

இந்நிலையில்,அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொமை விவகாரத்தில் உண்மைக் குற்றவாளிகளை மறைக்க முயலும் தி.மு.க. வைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டியும் பா.ஜ.க. மகளிரணியினர் மதுரையில் இருந்து 3ந் தேதி சென்னை வரை நீதிப் பேரணி நடத்த உள்ளதாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை அறிவித்து இருந்தார். இந்த பேரணிக்கு மகளிரணி மாநில தலைவி உமாபாரதி தலைமை தாங்குகிறார்.

மதுரையில்இந்தவாகன பேரணி நாளை (3ந்தேதி) காலை 10.30 மணிக்கு மதுரை சிம்மக்கல் செல்லத்தம்மன் கோவில் அருகில்இருந்துதொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பேரணியில் தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு, நடிகை ராதிகா, பா.ஜ.க. மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்கிறார்கள்.

இந்த வாகன பேரணி சென்னையில் நிறைவடையும் போது தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், முன்னாள் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் ஆகியோர் வரவேற்று, பின்னர் கவர்னரை சந்தித்து மனு கொடுக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாகமதுரை மாநகர் மாவ ட்ட பாஜக தலைவர் மகா சுசீந்திரன் கூறுகையில், மதுரையில் நாளை தொடங்கும் மகளிர் அணி நீதி யாத்திரை பேரணியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்க உள்ளனர். இதற்காக போலீஸ் அனுமதி கேட்கப்பட்டது. ஆனால் போலீசார் அனுமதி மறுத்துள்ளனர். ஆனாலும் திட்டமிட்டபடி நீதியாத்திரை வாகன பேரணி நடைபெறும் என்றார்.

# கால்நடைகளை கடித்து அட்டகாசம் செய்து வந்த சிறுத்தையை கூண்டு வைத்து பிடித்த வனத்துறையினர்



கிருஷ்ணகிரி, ஜன.4

கிருஷ்ணகிரி மாவட்டம் தேனிக்கோட்டையில் உள்ள அடிமைசாமிபுரத்தில் சிறுத்தை நடமாடுவதாக வனத்துறையினர் தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து சிறுத்தை பிடிக்க வனத்துறையினர் அந்த பகுதியில் ஒரு கூண்டை வைத்தனர். அந்த கூண்டின் முன்பு ஒரு ஆட்டை உயிருடன் கட்டி வைத்து காண்கணித்து வந்தனர்.

கூண்டின் முன்பு இருந்த ஆட்டை கடிப்பதற்காக வந்த சிறுத்தை கூண்டுக்குள் லவகமாக சிக்கியது. கூண்டிற்குள் சிக்கிய அந்த சிறுத்தை சுமார் 12 வயது மதிக்கத்தக்க ஆண் சிறுத்தை என்பது தெரியவந்தது. கடந்த சில தினங்களாக தேன்கனிக்கோட்டை பகுதியை அச்சத்தில் உறைய வைத்திருந்த சிறுத்தையை வனத்துறையினர் பிடித்த சம்பவத்தால், அந்த பகுதி பொதுமக்கள் நிம்மதி பெரு மூச்சு விட்டனர்.

# மெரினா, பெசன்ட்நகர் கடற்கரையில் வாகனம் நிறுத்த பாஸ்டேக் முறையில் கட்டணம் வசூல்



சென்னை, ஜன.4

சென்னை மாநகராட்சியின் வருவாயை அதிகரிக்கவும், சென்னை மெரினா மற்றும் பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரையில் வாகன நிறுத்த கட்டணத்தில் வெளிப்படைதன்மையை உறுதி செய்யவும், கட்டணம் செலுத்தாமல் இருப்பதை தடுக்கவும், நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி ஸ்மார்ட் வாகன நிறுத்த முறையை அமல்படுத்துமாறு மாநகராட்சி வருவாய்த்துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறைக்கு மாநகராட்சி கமிஷனர் குமர குருபரன் உத்தரவிட்டு உள்ளார்.

இதன் தொடர்ச்சியாக மாநகராட்சி துணை கமிஷனர் பிரிதிவிராஜ் தலைமையில் மாநகர வருவாய் அலுவலர், சிறப்பு திட்டத்துறை கண்காணிப்பு பொறியாளர், தேனாம்பேட்டை மற்றும் அடையாறு மண்டல அலுவலர்கள், சேவை வழங்கும் நிறுவனங்களுடன் சில தினங்களுக்கு முன்பு ஆலோசனை நடைபெற்றது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

ஆலோசனை கூட்டத்தில், கடற்கரையில் எதை நுழைவு வழியாகவும், எதை வெளியேறும் வழியாகவும் அமைப்பது, கிடைக்கும் வருவாயில் சேவை வழங்கும் நிறுவனம் மற்றும் மாநகராட்சி இடையிலான பங்கீட்டு அளவு, கட்டண வசூலில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப முறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதில் குறிப்பாக பாஸ்டேக் முறையை அமல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இதை கொண்டு வந்தால், சுங்கச்சாவடி போல, மெரினா அல்லது பெசன்ட்நகர் கடற்கரை வாகன நிறுத்த பகுதிக்குள் கார் வந்தாலே கட்டணம் பிடித்தம் செய்யப்படும். மேலும் நவீன சென்சார்கள் மூலம் எங்கெங்கு வாகன நிறுத்த இடங்கள் காலியாக உள்ளது என செயலி மூலமாக வாகன ஓட்டிகளே பார்த்து தெரிந்துகொள்ளும் வசதியை வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தற்போது மெரினாவில் இரு சக்கர வாகனங்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு ரூ.5, நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ.20 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இங்கு வார நாட்களில் சுமார் ரூ.6 ஆயிரம் வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் ரூ.10 ஆயிரத்துக்கு மேல் வாகன நிறுத்த கட்டணம் வசூலாகிறது. நவீன முறையை கொண்டு வந்தால், இந்த வருவாய் இரட்டிப்பாக வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# வாக்கிங் நிமோனியாவிடம் தப்பிக்க முகக்கவசம் டாக்டர்கள் எச்சரிக்கை



சென்னை, ஜன. 4

பருவமழை காலத்தில் பரவி வரும் வாக்கிங் நிமோனியா காய்ச்சல் மக்கள் மத்தியில் ஒருவித மான பீதியை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த மைக்கோபிளாஸ்மா நிமோனியாவால் ஏற்படும் நுரையீரல் தொற்று உள்ளவர்கள் ஆரோக்கியமாக இருப்பதாக தோன்றலாம். லேசான அறிகுறிகளுடன் இருப்பதால் வீட்டிலோ அல்லது படுக்கையிலோ இருக்க மாட்டார்கள். நடமாடி கொண்டிருப்பார்கள். எனவே தான்வாக்கிங்நிமோனியா என்று பெயர் வைத்துள்ளார்கள்.

பொதுவான அறிகுறிகளாக உடல் சோர்வு, காய்ச்சல், தலைவலி, இருமல், தொண்டை வலி இருக்கும். குழந்தைகளை பொறுத்தவரை தும்மல், சுவாசிப்பதில் சிரமம், சளி, கண்களில் நீர்வடிதல் காணப்படும்.

நுரையீரல் தொற்று உள்ளவர்களுக்கு பொதுவாக குளிர், அதிகமான இருமல், சோர்வு காணப்படும். சிலர் எந்த அறிகுறியும் இல்லாமல் இருக்கலாம். இந்த மாதிரி அறிகுறி இருப்பவர்கள் பி.சி.ஆர்., ஆன்டிபாடி பரிசோதனை செய்து கொள்வது அவசியம். தொற்று கண்டறியப்பட்டால் 'அசித்ரோமைசின்' மாத்திரை எடுத்து கொள்கிறார்கள்.

கடுமையான மூச்சு திணறலுடன் பலர் ஆஸ்பத்திரிகளுக்கு வருவதாகவும் அவர்களுக்கு ஆக்சிஜன் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் மருத்துவர்கள் கூறுகிறார். குழந்தைகள் பலர் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகிறார்கள்.

இந்த தொற்று ஏற்பட்டு இருப்பவர்கள் தும்மும் போதும், இருமும் போதும் வெளிப்படும் கிருமிகளால் மற்றவர்களுக்கும் இந்த தொற்று ஏற்படுகிறது.

நெருக்கமான இடங்களில் செல்பவர்கள், பள்ளி அல்லது கல்லூரி மாணவ மாணவிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த வயதானவர்கள், கர்ப்பிணி பெண்கள் எளிதில் இந்த தொற்றுக்கு ஆளாகிறார்கள். இந்த தொற்றில் இருந்து தப்பிக்க முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி மட்டுமே தீர்வு என்கிறார்கள்.

# தனி ரேசன் கார்டு கோரி விண்ணப்பம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



சென்னை, ஜன.4

தமிழ்நாட்டில் ரேசன் கார்டு கேட்டு விண்ணப்பம் செய்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஒரு குடும்பத்தில் திருமணம் ஆகும் தம்பதியினர் தனிக் குடித்தனம் சென்றால் பழைய முகவரியில் உள்ள பெயரை நீக்கி சான்றிதழ் வாங்கி அதை இணைத்து விண்ணப்பம் செய்வது நடைமுறை வழக்கமாகும். இவற்றை அதிகாரிகள் பரிசீலித்து முறையாக புது கார்டு வழங்கிவருகின்றனர். ஆனால் சில இடங்களில் ஒரே வீட்டில் இருந்து கொண்டு தனியாக ரேசன் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது தனித்தனியாக சமையல் எரிவாயு இணைப்பு இல்லாவிட்டால் அதை அதிகாரிகள் நிராகரித்து விடுகின்றனர். அந்த வகையில் 2.65 லட்சம் பேர் புது கார்டு கேட்டு விண்ணப்பம் செய்திருந்ததில் 1.36 லட்சம் கார்டுகள் நிராகரிக்கப்ப ட்டுள்ளது.

இதுகுறித்துஅதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தை பொறுத்தவரை ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரேசன் கார்டு என்பது அத்தியாவசியமான ஒன்று. ரேசன் கடைகளில் பொருட்கள் வாங்குவது மட்டுமின்றி அரசின் நிதி உதவியை பெறுவதற்கும், வெள்ள நிவாரண உதவியை பெறுவதற்கும் இது முக்கியமாக பயன்படுகிறது. சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், 100 நாள் வேலைக்கான பணி அட்டை ஆகியவற்றை பெறுவதற்கும், கூட ரேசன் கார்டு தேவைப்படுகிறது. தி.மு.க. ஆட்சியில் இப்போது மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கு ரேசன் கார்டு முக்கியம் என்பதால் அதற்காகவே புதிய ரேசன் கார்டு கேட்டு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது.

அதனால்தான் நேரடியாக அந்தந்த பகுதிகளுக்கு சென்று தகுதியானவர்களுக்கு மட்டும் புது கார்டு வழங்கப்படுகிறது.கடந்தஆண்டு அதனால் தான் புது ரேசன் கார்டு வழங்குவதை சில மாதத்துக்கு அரசு நிறுத்தியது. இப்போது மீண்டும் கார்டு வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் தற்போது 2.25 கோடி ரேசன் கார்டுகள் உள்ளன. அதில் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து இது வரை 16.3 லட்சம் புதிய கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை மாநகராட்சியுடன் வானகரம்அடையாளம்பட்டு கிராம ஊராட்சிகள் இணைகிறது



சென்னை, ஜன.4

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் தலா ஒரு மாநகராட்சி இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. தற்போது 24 மாவட்டங்களில் 25 மாநகராட்சிகள் உள்ளன. ஆகவே மீதம் உள்ள 14 மாவட்டங்களிலும் மாநகராட்சிகளை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதேசமயம் தற்போது உள்ள மாநகராட்சிகளை விரிவாக்கம் செய்யவும் தமிழகஅரசுமுடிவுசெய்து அதற்கான பணிகளையும் துரிதப்படுத்தி உள்ளது. அதன்படி சென்னை மாநகரட்சியும் விரிவு படுத்தப்படுகிறது. சென்னை மாநகராட்சியானது, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 66.72 லட்சம் மக்கள் தொகையையும், 426 சதுர கி.மீ. பரப்பளவையும் கொண்டதாகும்.

தற்போதுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியுடன், திருவள்ளூர் மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்துள்ள அடையாளம்பட்டு மற்றும் வானகரம் ஆகிய கிராம ஊராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

இவ்விரு கிராம ஊராட்சிகளின் பரப்பளவு சுமார் 15.77 சதுர கி.மீ. ஆகும் மற்றும் மக்கள் தொகை சுமார் 32,353 ஆகும். இவ்விணைப்பிற்கு பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லை சுமார் 442 சதுரகி.மீ.ஆகவிரிவாக்கம் அடையும் மற்றும் மொத்த மக்கள்தொகை 67,04,455 ஆக அதிகரிக்கும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள 2 கிராம ஊராட்சிகள் இணைப்பால் அப்பகுதி மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதுடன் அடிப்படை வசதிகளும் மேம்படும். இது தொடர்பாக மக்கள் தங்கள் ஆட்சேபனைகளை 6 வாரங்களுக்குள் நகராட்சி நிர்வாகத்துறை முதன்மை செயலாளருக்கு அனுப்பலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கழிவுகளை கொட்டிய மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்... கேரள அரசுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் எச்சரிக்கை




சென்னை, ஜன.4

மருத்துவ கழிவுகளை தமிழகத்தில் கொட்டியது தொடர்பாக தென்மண்டல தேசியபசுமைதீர்ப்பாயம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தி வருகிறது. இன்று இது தொடர்பாக விசாரணை நடத்தியது.

அப்போது 390 டன் மருத்துவ கழிவுகளை 30 டிரக்குகள் கொண்டு அகற்றியுள்ளதாக கேரள அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நீதிபதிகள் கேரள வழக்கறிஞரிடம் "7 நாட்களான நிலையில் ஏன் இன்னும் முறையான அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. கேரளாவில் இருந்து மருத்துவ கழிவுகளை கொண்டு வந்து கொட்டிய மருத்துவமனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?" என கேள்வி எழுப்பினர்.

மேலும், "மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்காவிடில் தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பிக்க நேரிடும். கழிவுகளை தமிழகத்தில் நிறுத்துவதை நிறுத்த வேண்டும்" கேரள அரசுக்குஎச்சரிக்குவிடுத்தனர்.

மருத்துவ கழிவு கொட்டியது தொடர்பாகஎல்லை மாவட்டங்களில் சிறப்பு கண்காணிப்பு குழு அமைக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர். அத்துடன் வழக்கை ஜனவரி 20ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்.

குப்பை அகற்றம் தொடர்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் வழக்கறிஞர் சாய் சத்யஜித் ஆஜரானார்.

# மனைவியுடன் தகராறு: கிணற்றில் தள்ளப்பட்ட பைக்கை மீட்க சென்ற கணவருடன் சேர்ந்து 4 வாலிபர்கள் பலியான சோகம்



சென்னை, ஜன.4

ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் மாவட்டம் சார்வாஹா கிராமத்தில் உள்ள சுந்தர் கர்மாலி (27) என்பவருக்கும் அவரது மனைவி ரூபா தேவிக்கும் குடும்பத் தகராறு ஏற்பட்டது. சண்டையில் ஆத்திரமடைந்த கர்மாலி தனது மோட்டார் சைக்கிளை கிணற்றில் தள்ளி விட்டார். பின்னர் உடனே அவர் தனது மோட்டார் சைக்கிளை எடுப்பதற்காக கிணற்றில் குதித்துள்ளார். ஆனால் அவர் மேலே வரவில்லை.அவரதுமனைவி ரூபா அலறல் சத்தம் கேட்டு 4 பேர்கர்மாலியை மீட்க முயன்றனர்.

உடனே அந்த 4 பேரும் கிணற்றுக்குள் குதித்தனர். ஆனால் அதன்பின்னர் அந்த 4 பேரும் மேலே வரவில்லை. அவர்களும் உயிரிழந்தனர்.

தகவலின் அறிந்து போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

அந்த நால்வரும் ராகுல் கர்மாலி, வினய் கர்மாலி, பங்கஜ் கர்மாலி மற்றும் சூரஜ் பூயான் என அடையாளம் காணப்பட்டனர்.

கிணறு மூடப்பட்டு அதன் அருகே செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று போலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

கிணற்றுக்குள் குதித்தவர்கள் விஷ வாயு தாக்கி உயிரிழந்து இருக்கலாம் என்றும் உயிரிழப்பிற்கான காரணம் குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் போலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

# எஸ்.வி.சேகருக்கு ஒரு மாத சிறை தண்டனையை உறுதி செய்தது ஐகோர்ட்



சென்னை, ஜன.4

கடந்த 2018ம் ஆண்டு நடிகர் எஸ்.வி.சேகர் பெண் பத்திரிகையாளர் குறித்து விமர்சித்து ஒரு பதிவை முகநூல் பக்கத்தில் வெளியிட்டார். இதற்கு பத்திரிகையாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அவரது வீட்டின் முன்பு போராட்டங்களும் நடத்தின.

இதனிடையே எஸ்வி சேகருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அந்த புகாரின் அடிப்படையில்சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் அப்போது வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு சென்னையில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், நடிகர் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாதம் சிறை தண்டனை,

15 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தது.இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு எதிராக தண்டனை நிறுத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில், நடிகர் எஸ்.வி.சேகர் மேல்முறையீடு செய்தார். இதையடுத்து இந்த வழக்கின் விசாரணை நடைபெற்று வந்த நிலையில் வழக்கை தேதி குறிப்பிடாமல் நீதிபதி ஒத்திவைத்தார்.

இந்த நிலையில், நடிகர் எஸ்.வி.சேகருக்கு விதிக்கப்பட்ட ஒருமாத சிறை தண்டனையை உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் இன்று உறுதி செய்துள்ளார். மேலும் எஸ்.வி.சேகரின்மேல்முறையீட்டு மனுவைதள்ளுபடிசெய்து உத்தரவிட்டுள்ளார்.

# கள்ளக்காதலனை திருமணம் செய்து வைக்ககோரி போலீஸ் நிலையம் முன்பு இளம்பெண் தீக்குளிக்க முயற்சி

போரூர், ஜன.4

வடபழனி, பகுதியை சேர்ந்த 35வயது இளம் பெண் கிளப்பில் நடனமாடி வருகிறார். இவர்திருமணமாகி கணவருடன் வசித்து வந்தார். இந்த நிலையில் இளம்பெண்ணுக்கும் அதே பகுதியை சேர்ந்த திருமணமான சமையல் காண்ட்ராக்டர் ஒருவருக்கும் இடையே கள்ளக்காதல் ஏற்பட்டது.

அவர்கள் இருவரும் கடந்த 3 ஆண்டுகளாக நெருங்கி பழகி வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில்தன்னை2வதாக திருமணம் செய்து கொள்ளும்படி இளம்பெண், தனது கள்ளக்காதலன் சமையல் காண்டிராக்டரிடம்வற்புறுத்தினார்.

ஆனால் அவர் திருமணத்திற்கு மறுத்தார். இதனால் மனவேதனை அடைந்த இளம்பெண் இதுபற்றி புகார் அளிக்க நேற்று நள்ளிரவு 1 மணி அளவில் வடபழனி போலீஸ் நிலையத்துக்கு வந்தார். அப்போது பணியில் இருந்த போலீசார் இளம்பெண்ணுக்கு அறிவுரை கூறினர். எனினும் சமாதானம் அடையாத இளம்பெண் திடீரென தனது மோட்டார் சைக்கிளில் கேனில் வைத்திருந்த பெட்ரோலை தனது உடலில் ஊற்றிக் கொண்டு போலீஸ் நிலையம் முன்பு நின்ற படி"தற்கொலை செய்து கொள்ள போகிறேன்" என்று கூறி மிரட்டல் விடுத்தார்.

இதை கண்டு அதிர்ச்சி அடைந்த போலீசார் உடனடியாக அவர் மீது தண்ணீரை ஊற்றி மீட்டனர். பின்னர் அவரது கணவரை வரவழைத்த போலீசார் இளம்பெண்ணை எச்சரித்து அவருடன் அனுப்பி வைத்தனர்.

# விவேகானந்தர் மண்டபத்துக்கு ஒரே ஆண்டில் 20 லட்சம் சுற்றுலா பயணிகள் படகில் பயணம்



கன்னியாகுமரி, ஜன.4

சர்வதேச சுற்றுலா தலமானகன்னியாகுமரிகடல் நடுவில் அமைந்துள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அதன் அருகில் உள்ள மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் நிறுவப்பட்டுள்ளது. இவற்றை தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் படகில் சென்று பார்த்து வருகிறார்கள். இவற்றை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக தமிழகஅரசுநிறுவனமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துகழகம்படகு போக்குவரத்தை நடத்தி வருகிறது.

இதற்காக பொதிகை, குகன், விவேகானந்தா ஆகிய 3 படகுகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த படகு போக்குவரத்து தினமும் காலை 8 மணிக்கு தொடங்கி மாலை 4 மணி வரை இடைவெளி இன்றி தொடர்ச்சியாக நடந்து வருகிறது. இதன் மூலம் கடந்த ஒரே ஆண்டில் 20 லட்சத்து 13 ஆயிரத்து 211 பேர் படகில் ஆர்வமுடன் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அதேவேளையில் கடந்த 2023ம் ஆண்டு 19 லட்சத்து 4 ஆயிரத்து 221 சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் மண்டபத்துக்கு படகில் பயணம் செய்துள்ளனர். இதனை ஒப்பிட்டு பார்க்கும் போது 2024ம் ஆண்டு 1 லட்சத்து 8 ஆயிரத்து 990 பேர் அதிகமாகும்.

விவேகானந்தர்நினைவு மண்டபத்தை கடந்த ஆண்டு மாதம் வாரியாக பார்வையிட்ட சுற்றுலா பயணிகளின்எண்ணிக்கை விவரம் வருமாறு:

ஜனவரி 2 லட்சத்து 34 ஆயிரத்து 106 பேர், பிப்ரவரி 1 லட்சத்து 58 ஆயிரத்து 802 பேர், மார்ச் 1 லட்சத்து 61 ஆயிரத்து 80 பேர், ஏப்ரல் 1 லட்சத்து 42 ஆயிரத்து 867 பேர், மே 1 லட்சத்து 80 ஆயிரத்து 318 பேர், ஜூன் 1 லட்சத்து 49 ஆயிரத்து 472 பேர் படகில் பயணம் செய்து பார்வையிட்டுள்ளனர்.

ஜூலை 1 லட்சத்து 22 ஆயிரத்து 974 பேர், ஆகஸ்ட் 1 லட்சத்து 40 ஆயிரத்து 710 பேர், செப்டம்பர் 1 லட்சத்து 51 ஆயிரத்து 803 பேர், அக்டோபர் 1 லட்சத்து 69 ஆயிரத்து 489 பேர், நவம்பர் 2 லட்சத்து 9 ஆயிரம் பேர், கடந்த டிசம்பர் 1 லட்சத்து 93 ஆயிரத்து 942 பேர் படகில் பயணம் செய்து விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டு வந்துள்ளனர்.

இதில் கடந்த ஆண்டில் ஜனவரி மாதம் மட்டும் அதிக அளவு அதாவது 2 லட்சத்து 34 ஆயிரத்து 106 சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் மண்டபத்தை படகில் பயணம் செய்து பார்வையிட்டு வந்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த 1½ வருடங்களாக திருவள்ளுவர் சிலையில் கண்ணாடி பாலப்பணிகள் நடைபெற்று வந்ததால் அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

# ஆவடி மாநகராட்சியுடன் இணையும் பூந்தமல்லி, திருவேற்காடுதிருநின்றவூர் நகராட்சிகள்




ஆவடி, ஜன.4

ஆவடி மாநகராட்சியின் எல்லை 65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இந்த நிலையில் ஆவடி மாநகராட்சியின் எல்லையை வரிவுபடுத்தி அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

அதன்படி ஆவடி மாநகராட்சியுடன் பூந்தமல்லி. திருவேற்காடு, திருநின்றவூர் ஆகிய 3 நகராட்சிகள் இணைகின்றன.

இதேபோல் கருணாகரச்சேரி. நடுக்குத்தகை, நெமிலிச்சேரி, மோரை, பாலவீடு, வெள்ளானூர். அயப்பாக்கம், காட்டுப்பாக்கம், கண்ணப்பாளையம், சோராஞ்சேரி, பாணவேடு தோட்டம், சென்னீர்குப்பம். நசரத்பேட்டை, பாரிவாக்கம், வரதராஜபுரம், அகரமேல், மேப்பூர் ஆகிய 17 கிராம ஊராட்சிகளும் சேருகின்றன.

இதையடுத்து 3 நகராட்சிகள் மற்றும் 17 ஊராட்சிகளை இணைத்த பிறகு ஆவடி மாநராட்சி சுமார் 181.82 சதுர கிமீ. பரப்பளவில் அமையும்.

இதில் பூந்ததவல்லி மற்றும் திருவேற்காடு நகராட்சிகள், சென்னை பெங்களூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளன. பூந்தமல்லியில்சென்னைமெட்ரோ ரெயில் சேவை வருகிற 2026ம் ஆண்டு தொடங்கப்பட உள்ளது. மற்றும் 100 வருட பழமையான அறிஞர் அண்ணா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவேற்காட்டில் புகழ் பெற்ற மாரியம்மன் கோவில் உள்ள பாரம்பரிய நகரமாகும்.

திருநின்றவூர் நகராட்சியில் 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றான பக்தவச்சலபெருமாள்கோவில் மற்றும் பூந்தமல்லி, திருநின்றவூர். மோரை, வெள்ளலூர் பகுதிகளை இணைக்கும் வெளிவட்டச் சாலை(வண்டலூர் முதல் மாதவரம் வரை) அமைந்துள்ளது. இந்த 20 உள்ளாட்சி அமைப்புகளையும் ஆவடி மாநகராட்சியுடன் இணைப்பதால் மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதுடன் அடிப்படை வசதிகளும் மேம்படும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும் நகராட்சிகள், ஊராட்சிகளை மாநராட்சியுடன் இணைப்பது குறித்து ஆட்சேபனைகள் இருந்தால் பொதுமக்கள் நகராட்சி நிர்வாகத்துறை முதன்மை செயலாளரிடம் முறையிடலாம் என்றும் அரசு தெரிவித்து உள்ளது.

# மேட்டுப்பாளையம்கோத்தகிரி சாலையில் இளைஞர்கள் `பைக் ரேஸ்' வனத்துறை எச்சரிக்கை



மேட்டுப்பாளையம், ஜன.4

மேட்டுப்பாளையம் வனப்பகுதியில் உள்ள யானைகள், மான், காட்டு மாடு, காட்டுப்பன்றி, சிறுத்தை, புலி உள்ளிட்ட பல்வேறு வனவிலங்குகள் உணவு மற்றும் தண்ணீரை தேடி ஊட்டி மற்றும் கோத்தகிரி சாலையை கடந்து வனப்பகுதியின் ஒருபுறத்தில் இருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெயர்ந்து செல்கின்றன.

நீலகிரி மாவட்டத்தின் நுழைவு வாயிலாக உள்ள மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு குன்னூர், கோத்தகிரி சாலை வழியாக நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன.

இந்த நிலையில் அந்த சாலைகளில் இரவு நேரங்களில் கோத்தகிரி வியூ பாயிண்ட் செல்வதாக கூறி ஒருசில இளைஞர்கள் பைக் ரேசில் ஈடுபடுவதாக புகார் எழுந்தது.

மேலும் ரேஸ் செல்லும் மோட்டார் சைக்கிள்களில் அதிக சத்தம் எழுப்பும் சைலன்சர்கள் பொருத்தப்பட்டு இருப்பதால் வனவிலங்குகளுக்கு இடையூறு ஏற்படுகிறது.

இதன்காரணமாக வனவிலங்குகள் ஆத்திரமடைந்து வாகனஓட்டிகளை தாக்கும் அபாய நிலை உள்ளது. மேலும் வாகன ஓட்டிகளும் விபத்துக்களில் சிக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே மேட்டுப்பாளையம்கோத்தகிரி சாலையில் வனத்துறையினரும், போலீசாரும் இணைந்து வாகன சோதனை நடத்துவதுடன் ரோந்து பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென வன ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ந்து மேட்டுப்பாளையம் வனச்சரகர் ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான வனத்துறையினரும், மேட்டுப்பாளையம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சின்னக்காமனன் தலைமையிலான போலீசாரும் இணைந்து மேட்டுப்பாளையம்கோத்தகிரி சாலையில் இரண்டு நான்கு சக்கர வாகனங்களை தடுத்து நிறுத்தி வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

மேலும் வாகனங்களில் அதிவேக மாக உலா வந்த இருசக்கர வாகன ஓட்டிகளை பிடித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து வனத்துறையினர் மற்றும் போலீசார் கூறுகையில், வனப்பகுதியை ஒட்டி அமைந்து உள்ள சாலைகளில் இரவு நேரங்களில் பாதுகாப்பு, கவனம் மற்றும் எச்சரிக்கையுடன் பயணிக்க வேண்டும்.

மேலும் வனவிலங்குகளை கண்டால் கூட்டாகவோ, தனியாகவோ சேர்ந்து விரட்ட முயற்சிக்கக் கூடாது. வனவிலங்குகளை ஆத்திரமூட்டும் செயல்களிலும் ஈடுபட வேண்டாம் என்று அறிவுறுத்தினர்.

மேலும் சாகச நோக்கத்துடன் ஊர்வலமாக வந்திருந்த பல்வேறு வாகனங்களும் திருப்பி அனுப்பப்பட்டன.

# சின்னாறு நீர்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறக்க உத்தரவு



சென்னை,ஜன.4

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமம், சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து 202425 (பசலி 1434) ஆம் ஆண்டிற்கு பாசனத்திற்காக பழைய ஆயக்கட்டு பகுதி 5 ஏரிகளைநிரப்பி, புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு (03.01.2025) முதல் 22.05.2025 வரை 140 நாட்களுக்கு பாசனத்திற்கு என மொத்தம் 395.33 மில்லியன் கனஅடி தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமம், உட்பட 13 கிராமங்களில் உள்ள சின்னாறு நீர்த்தேக்க த்திலிருந்து இதன் மூலம் பழைய ஆயக்க ட்டு மற்றும் புதிய ஆய க்கட்டு பரப்பு மொத்தம் 4,500.00 ஏக்கர் நிலம் பயன்பெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொங்கல் பரிசுத்தொகையாக ரூ.1,000 வழங்க வேண்டும்: அண்ணாமலை கோரிக்கை



சென்னை, ஜன.4

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது;

"தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள், குழந்தைகள் மீது வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. குற்றங்கள் அதிகமாக நடப்பது தெரியக்கூடாது என்பதற்காக காவல் துறை குற்றங்களை பதிவு செய்ய அனுமதி மறுக்கிறது. இதை வன்மையாக கண்டிக்கிறோம். அயனாவரத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பாலியல் துன்புறத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளை காவல்துறை கண்டித்து அனுப்பிவிடுகிறது.

"பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக நடைபெற்றும் வரும் வன்முறைகளுக்கு மதுரையில் நாளை திட்டமிட்டப்பட்ட பா.ஜ.க. மகளிரணி பேரணியை தொடங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பத்தாயிரம் சிதிலமடைந்த பள்ளிகளை சீரமைப்போம் என தி.மு.க. வாக்குறுதி அளித்திருந்தது. எத்தனை பள்ளிகளை சீரமைத்துள்ளனர் என்பது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். கடந்த ஆண்டு ரூ.90,000 கோடி கடன். இந்த ஆண்டு ரூ.1 லட்சம் கோடி கடன் வாங்கப் போறீர்கள். வாங்குகிற கடனை என்னதான் செய்கிறீர்கள்? இவ்வளவு கடன் வாங்கியும் பொங்கலுக்கு ரூ.1,000 கொடுக்க முடியவில்லை என்றால், என்ன அரசு நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? பொங்கல் பரிசுத்தொகையாக ரூ.1,000 வழங்க வேண்டும்.

எனது சாட்டை அடி போராட்டம் புரிய வேண்டியவர்களுக்கு புரியும். எனக்கும் பெண் குழந்தை உள்ளது. தமிழகத்தில் சிஸ்டம் தோல்வி அடைந்துள்ளது. அது சரியாகும் வரை சாட்டை அடி போராட்டத்தை விடப்போவதில்லை. செருப்பு இல்லாமல் நடக்கும் போதுதான் தெரிகிறது தமிழகத்தில் சாலைகள் சுத்தமாக இல்லை. தி.மு.க. ஆட்சி நிச்சயம் அகற்றப்படும்."

இவ்வாறு அவர் பேசினார்.

# திருச்செந்தூர் கடற்கரையில் 2வது நாளாக கடல் அரிப்பு

திருச்செந்தூர், ஜன.4

திருச்செந்தூர் கோவில் கடல் பகுதியில் பவுர்ணமி, அமாவாசை நாட்கள் மற்றும் அவற்றுக்கு முந்தைய, பிந்தைய நாட்களில் கடல் உள்வாங்குவதும், அலைகள் சீற்றத்துடன் காணப்படுவதும் வழக்கம். பின்னர் கடல் இயல்பு நிலைக்கு திரும்பி விடும்.

கடந்த மாதம் 30ந்தேதி அமாவாசை தினம் என்பதால், கடந்த 2 நாட்களாக திருச்செந்தூர் கோவில் பகுதியில் கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டது. நேற்று முன்தினம் கோவிலில் இருந்து கடற்கரைக்கு இறங்கும் படிக்கட்டு அருகில் சுமார் 300 அடி தூரத்துக்கு கடல் அரிப்பு ஏற்பட்டது. நேற்று கடல் அரிப்பு மேலும் அதிகரித்ததால், கடற்கரையில் 7 அடி ஆழத்துக்கு பள்ளமாக காணப்பட்டது. கடல் சீற்றத்துடன் காணப்பட்டதால் சுமார் 25 அடி தூரம் வரையிலும் ராட்சத அலைகள் வெளியே வந்து சென்றன.



எனினும் பக்தர்கள் எவ்வித அச்சமும் இன்றி வழக்கம்போல் கடலில் இறங்கி புனித நீராடினர். கடல் அரிப்பு ஏற்பட்டு பள்ளமான இடத்தில் ஏறி இறங்குவதற்கு சற்று சிரமப்பட்டனர். திருச்செந்தூர் கோவில் பகுதியில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை

## சவுமியா அன்புமணி

சென்னை, ஜன.4

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதை கண்டித்து பாமக சார்பாக சவுமியா அன்புமணி தலைமையில் 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினர் போராட்டம் நடத்தினர். அவர்களை கைது செய்த காவல்துறையினர் திருவல்லிக்கேணியில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் அடைத்து வைத்தனர். மாலை 6 மணிக்கு காவல் துறையினர் சவுமியா மற்றும் அவரோடு கைது செய்யப்பட்ட 300க்கும் மேற்பட்டோரை விடுவித்தனர்.



பின்னர் சவுமியா அன்புமணி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"எங்களை கைது செய்ய முதல் ஆளாக வருகிறார்கள். எங்களை கைது செய்ய வந்த காவல்துறை, பெண் குழந்தைகளைக் காப்பாற்றி இருக்கலாமே. பெண்களுக்கு தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லை. கடந்த இரண்டு வருடங்களில் பாலியல் வன்கொடுமை இரு மடங்கு அதிகரித்துள்ளது. வட இந்தியாவைப் போல தமிழ்நாட்டிலும் பாலியல் வன்கொடுமை அதிகரித்துள்ளது. எங்கள் குழந்தைகளை எப்படி வெளியே அனுப்புவது. உங்களுக்கும் பெண் குழந்தை உள்ளது.

இந்தியாவில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத மாநிலங்களில் பட்டியலில் தமிழ்நாடு நான்காவது இடத்தில் உள்ளது. எங்கள் போராட்டத்தால்தான் ஞானசேகரன் கைது செய்யப்பட்டுள்ளார். மறுபடி மறுபடியும் குற்றம் செய்யக்கூடிய மனநோயாளி ஞானசேகரன். இதுவரை ஏன் குண்டர் சட்டத்தில் அவரை அடைக்கவில்லை. மதுவும் போதையும்தான் பாலியல் வன்கொடுமை நடக்க காரணம்" எனத் தெரிவித்தார்.




கோவை மாவட்டம் பொள்ளாச்சி எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளாலும் உலகமே வியந்து பார்க்கும் அளவுக்கு சரித்திரநாயகி நான்காம் வகுப்பு மாணவி அனிஷாபிவி கையால் இந்தியா ராக்கெட் ப்ராஜெக்ட் செய்து பொள்ளாச்சி சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி செம்பா கவுண்டர் காலனி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளிக்கூடத்துக்கு கொண்டு செல்கிறார்.

# ஸ்பின்னிங் மில்லில் திருடிய சிறுவன் உள்பட 3 பேரை விரட்டி பிடித்த பொதுமக்கள்

கோபி, ஜன.4

ஈரோடு மாவட்டம் கோபி அருகே கொளப்பலூர் யூனிட் நகரில் தனியார் ஸ்பின்னிங் மில் உள்ளது. இந்த மில் கடந்த 4 ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளது. இந்த மில்லில் காவலாளியாக ஜெயராமன் (வயது 55) என்பவர் இரவு நேர பாதுகாப்பு பணியில் இருந்து வருகிறார்.



இந்நிலையில் நேற்று நள்ளிரவில் மில்லின் பின்புறம் காம்பவுண்ட் சுவர் ஏறி குதித்த 4 பேர் மில் வளாகத்தில் இருந்த மின்சாதன பொருட்கள், பழைய இரும்பு பொருட்களை திருடி கொண்டிருந்தனர். சத்தம் கேட்டு மில் காவலாளி ஜெயராமன் மில்லின்பின்புறம் சென்று பார்த்தபோது 4 பேர் கொண்ட கும்பல் பொருட்களை திருடிக் கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதைத் தொடர்ந்து ஜெயராமன் சத்தமிட்டவாறே திருடர்களை பிடிக்க முயன்ற போது 4 பேரும் தப்பி ஓடினர். அதற்குள் ஜெயராமனின் சத்தம் கேட்ட அருகில் உள்ளவர்கள், மில் காம்பவுண்ட் சுவர் ஏரி குதித்து தப்பிய திருடர்களில் 3 பேரை விரட்டி பிடித்து சிறுவலூர் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதை தொடர்ந்து பிடிப்பட்டவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில் 3 பேரும் திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் வெங்கமேட்டை சேர்ந்த கவிராஜ் (27), மனோஜ் (19) மற்றும் அதேப்பகுதியை சேர்ந்த 17 வயது சிறுவன் என்பது தெரிய வந்தது. இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் பிடிப்பட்ட 3 பேரும் பகலில் குன்னத்தூரில் உள்ள பன்றி இறைச்சி கடையில் வேலை செய்து வந்ததும், இரவில் கொள்ளை அடிக்க சென்றதும் தெரிய வந்தது.

இதில் மனோஜ் மீது சிவகிரி போலீஸ் நிலையத்தில் திருட்டு வழக்கு நிலுவையில் இருப்பது விசாரணையில் தெரிய வந்தது. மேலும் நஞ்சை புளியம்பட்டியை சேர்ந்த பிரகாஷ் என்பவர் தப்பி ஓடியது தெரிய வந்தது. இது குறித்து சிறுவலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து 3 பேரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2 மோட்டார் சைக்கிள், ஒரு மொபட், திருடப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் தப்பி ஓடிய பிரகாசை போலீசார் தேடி வருகின்றனர். நள்ளிரவில் மில்லில் திருடிய கும்பலை பொதுமக்களே சுற்றி வளைத்து போலீசில் ஒப்படைத்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


# ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 6 அடி உயர திருவள்ளுவர் சிலை

ஊட்டி, ஜன.4

கன்னியாகுமரி கடல் நடுவே 133 அடி உயர திருவள்ளுவர் சிலை கடந்த 2000ம் ஆண்டு ஜனவரி 1ந்தேதி அப்போதைய முதல்அமைச்சர் கருணாநிதியால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆவதால் வெள்ளி விழா நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கடந்த 30, 31 மற்றும் ஜனவரி 1ந்தேதி கன்னியாகுமரியில் நடைபெற்றது. மேலும் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவை பிரபலப்படுத்த தமிழக அரசு சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மாவட்ட நிர்வாகம் சார்பில் 6 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டுள்ளது. இங்கு வரும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் திருவள்ளுவர் சிலையை பார்த்து புகைப்படம், செல்பி எடுத்து மகிழ்கின்றனர்.




இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்தினர் கூறுகையில், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 6 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட்டு உள்ளது. அடுத்த ஒரு சில மாதங்கள் இந்த திருவள்ளுவர் சிலை பூங்காவில் இருக்கும் என்றனர்.

# சசிகுமார் சிம்ரன் ஜோடி சேர்ந்த 'டூரிஸ்ட் ஃபேமிலி' படப்பிடிப்பு நிறைவு




சசிகுமார் நடிப்பில் கடைசியாக வெளிவந்த நந்தன் திரைப்படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. அதை தொடர்ந்து சசிகுமார் தற்பொழுது அடுத்த படமாக டூரிஸ்ட் ஃபேமிலி என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தை அறிமுக இயக்குநர் அபிஷான் ஜீவிந் இயக்கியுள்ளார். இந்த திரைப்படத்தில் சசிகுமார், சிம்ரன், மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ், யோகி பாபு, ரமேஷ் திலக், எம்.எஸ். பாஸ்கர், பக்ஸ் என்ற பகவதி பெருமாள் உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள்.

அரவிந்த் விஸ்வநாதன் ஒளிப்பதிவு செய்யும் இந்த திரைப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைக்கிறார். கலை இயக்கத்தை ராஜ் கமல் கவனிக்க, படத்தொகுப்பு பணிகளை பரத் விக்ரமன் மேற்கொள்கிறார். பாடலாசிரியர் மோகன் ராஜன் பாடல்களை எழுத, ஆடை வடிவமைப்பு பணிகளை நவா ராஜ்குமார் கையாள்கிறார்.

ஃபேமிலி என்டர்டெய்னராக தயாராகும் இந்த திரைப்படத்தை மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் மற்றும் எம் ஆர் பி என்டர்டெயின்மென்ட் ஆகிய பட நிறுவனங்கள் சார்பில் தயாரிப்பாளர்கள் நசரேத் பசலியான், மகேஷ் ராஜ் பசலியான், யுவராஜ் கணேசன் ஆகியோர் இணைந்து தயாரிக்கிறார்கள்.

படத்தின் டைட்டில் டீசர் கடந்த மாதம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளது. இதனை படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

சசிகுமார் தற்போது இயக்குநர் ராஜு முருகன் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் இயக்கத்தில் 'பிரீடம்' படத்தில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# 12 வருடங்களுக்கு பின் பொங்கலுக்கு வெளியாகிறது 'மத கஜ ராஜா'



சுந்தர் சி 2013 ஆம் ஆண்டு 'மத கஜ ராஜா' எனும் திரைப்படத்தை இயக்கினார். ஆனால் இப்படம் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக திரைக்கு வரவில்லை. இப்படத்தில் விஷால், சந்தானம், வரலட்சுமி, சதீஷ், நிதின் சத்யா, சோனுசூட், அஞ்சலி, மறைந்த நடிகர்கள் மணிவண்ணன், மனோபாலா, மயில்சாமி என பலரும் நடித்துள்ளனர்.

படத்தை விஷால் பிலிம் ஃபேக்டரி மற்றும் ஜெமினி பிலிம் சர்க்யூட் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ளது. விஜய் ஆண்டனி இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன் இப்படத்தின் டிரைலர் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இதையடுத்து இப்படம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் திரையரங்குகளில் வெளியாகும் என தகவல் வெளியானது. இருப்பினும் படம் வெளியாகவில்லை. இந்த நிலையில், இப்படம் வருகிற 12ந்தேதி பொங்கலையொட்டி வெளியாவதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது. கிட்டத்தட்ட 12 வருட காத்திருப்புக்கு பின் படம் வெளியாவதால் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

# பாக்ஸ் ஆஃபீசை தெறிக்க விடும் புஷ்பா 2 தி ரூல்.. ரூ. 1799 கோடி வசூல்




இயக்குநர் சுகுமார் மற்றும் நடிகர் அல்லு அர்ஜுன் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'புஷ்பா 2 தி ரூல்'. இந்த படத்தில் ராஷ்மிகா மந்தனா, ஃபகத் ஃபாசில் உட்பட பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். பின்னணி இசையை சாம் சி.எஸ். உருவாக்கி இருக்கிறார்.

பான் இந்தியா வெளியீடாகத் தமிழ், இந்தி, மலையாளம், கன்னட மொழிகளில் கடந்த டிசம்பர் 5 ஆம் தேதி வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று கொண்டாடப்பட்டு வருகிறது. 'புஷ்பா 2' முதல் நாள் வசூலாக 294 கோடி ரூபாய் வசூல் செய்துள்ளதாகவும், இதுவரை இந்திய சினிமாவில் முதல் நாள் வசூலித்தது இப்படத்தின் வசூலே அதிகம் என்று தகவல் வெளியானது.

இந்தியாவில் வெளியான படங்களில் மிக குறுகிய காலக்கட்டத்தில் ரூ. 1000 கோடி வசூல் செய்த படமாக புஷ்பா 2 உருவெடுத்தது. இந்த நிலையில், படம் வெளியான 25 நாட்களில் ரூ. 1760 கோடியை வசூல் செய்ததாக படக்குழு அறிவித்து இருந்தது.

இந்த நிலையில், புஷ்பா 2 திரைப்படம் இதுவரை ரூ. 1799 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இந்தப் படம் வெளியான 28 நாட்களில் இந்த வசூல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# வம்பிழுத்த கான்ஸ்டாஸ்.. சுத்துப்போட்ட இந்திய வீரர்கள் வைரலாகும் வீடியோ



ஆஸ்திரேலியா இந்தியா அணிகள் மோதும் 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி முதல் இன்னிங்சை விளையாடிய இந்திய அணி 185 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ரிஷப் பண்ட் 40 ரன்கள் எடுத்தார். ஆஸ்திரேலியா தரப்பில் ஸ்காட் போலண்ட் 4 விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டார்க் 3 விக்கெட்டுகளையும், பேட் கம்மின்ஸ் 2 விக்கெட்டுகளையும், நாதன் லயன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதைத் தொடர்ந்து முதலாவது இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 9 ரன்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்துள்ளது. இந்நிலையில் 4வது டெஸ்ட்டில் விராட் கோலியுடன் மோதலில் ஈடுபட்ட ஆஸ்திரேலிய இளம் வீரர் கான்ஸ்டாஸ் இந்த போட்டியில் பும்ராவிடம் வம்பிழுத்தார். இதனால் போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது. முதல் நாள் ஆட்ட நேர முடிவின் கடைசி ஓவரை பும்ரா வீசினார். அந்த ஓவரின் கடைசி பந்தை எதிர்கொள்வதற்கு கவாஜா அதிக நேரம் எடுத்துக் கொண்டார். இதனால் பும்ரா நடுவரிடம் முறையிட்டார். இதனை நான் ஸ்ட்ரைக்கரில் இருந்த பார்த்து கொண்டிருந்த கான்ஸ்டாஸ் பும்ராவிடம் வார்த்தை மோதலில் ஈடுபட்டார். உடனே நடுவர் வந்து இருவரையும் சமாதானப்படுத்தினார். இதனையடுத்து கடைசி பந்தை வீசிய பும்ரா, கவாஜா விக்கெட்டை கைப்பற்றினர். விக்கெட்டை வீழ்த்திய சந்தோஷத்தில் பும்ரா உடனே கான்ஸ்டாஸ் பக்கம் திரும்பி முறைத்தார். அவர் மட்டுமல்லாமல் அனைத்து வீரர்களும் கான்ஸ்டாவை கிண்டலடித்தனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# 5வது டெஸ்ட்: ஏழு பேர் அவுட்.. முதல் நாளே தடுமாறும் இந்திய அணி

ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் இடையிலான ஐந்தாவது டெஸ்ட் போட்டி சிட்னியில் துவங்கி நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங் தேர்வு செய்துள்ளது. இந்திய கேப்டன் ரோகித் சர்மா இந்தப் போட்டியில் இருந்து விலகியதை அடுத்து ஜஸ்பிரித் பும்ரா அணியை வழிநடத்துகிறார். பேட்டிங் தேர்வு செய்த இந்திய அணிக்கு துவக்க வீரர்களாக யஷஸ்வி ஜெய்ஸ்வால் 10 ரன்களிலும், கே.எல். ராகுல் 4 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த சுப்மன் கில் சற்று நேரம் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவரும் 64 பந்துகளை எதிர்கொண்டு 20 ரன்களை அடித்த நிலையில், தனது விக்கெட்டை பறிகொடுத்தார். இதனால் ஐந்தாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் உணவு இடைவேளை வரை இந்திய அணி மூன்று விக்கெட்டுகளை இழந்து 57 ரன்களை சேர்த்து இருந்தது. உணவு இடைவேளைக்கு பிறகு துவங்கிய ஆட்டத்தில் விராட் கோலியுடன் இணைந்த ரிஷப் பண்ட் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். விராட் கோலி 69 பந்துகளில் 17 ரன்களுக்கு நடையை கட்டினார். எனினும், நிலைத்து ஆடிய ரிஷப் பண்ட் 98 பந்துகளை எதிர்கொண்டு 40 ரன்களை சேர்த்தார். இவருடன் விளையாடிய ரவீந்திர ஜடேஜா பொறுமையாக ஆடி வருகிறார். கிட்டத்தட்ட 14 ஓவர்கள் வரை பேட்டிங் செய்த ஜடேஜா 26 ரன்களை சேர்த்தார். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட நிதிஷ் குமார் ரெட்டி வந்த வேகத்தில் டக் அவுட் ஆகி வெளியேறினார். இதனால் இந்திய அணி வீரர்கள் முதல் நாள் ஆட்டத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகின்றனர். தற்போது வரை இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 143 ரன்களை எடுத்துள்ளது. ஆஸ்திரேலியா சார்பில் சிறப்பாக பந்துவீசி வரும் ஸ்காட் போலண்ட் 4 விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டார்க் 2 விக்கெட்டுகளையும் நேதன் லயன் ஒரு விக்கெட் வீழ்த்தியுள்ளனர்.

# 16 பேர் கொண்ட இந்திய அணி: பி.சி.சி.ஐ. லிஸ்ட்டில் காணாமல் போன ரோகித் சர்மா பெயர்

ஆஸ்திரேலியா இந்தியா அணிகள் இடையிலான ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் துவங்கி நடைபெற்று வருகிறது. ஏற்கனவே வெளியான தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில், இந்தப் போட்டியில் ரோகித் சர்மா விளையாடவில்லை. அவர் விலகியதை அடுத்து இந்திய அணி கேப்டனாக ஜஸ்பிரித் பும்ரா செயல்படுகிறார். போட்டியில் டாஸ் முடிந்த பிறகு இந்திய அணி வீரர்கள் அடங்கிய பட்டியலை பி.சி.சி.ஐ. வெளியிட்டது. இந்தப் பட்டியலில் அனைவரும் அதிசயிக்கும் வகையில், கேப்டன் ரோகித் சர்மாவின் பெயர் இடம்பெறாமல் உள்ளது. இன்றைய போட்டியில் விளையாடாத ரோகித் சர்மா அணியின் ஆடும் 11இல் இடம்பெற வாய்ப்பு இல்லை. எனினும், பி.சி.சி.ஐ. வெளியிட்ட 16 வீரர்கள் அடங்கிய இந்திய அணி பட்டியலில் கேப்டன் ரோகித் சர்மா பெயர் இடம்பெறாதது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. இந்திய அணி வீரர்கள் பட்டியலிலேயே ரோகித் சர்மா பெயர் இடம்பெறாதது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. முன்னதாக இன்றைய போட்டியில் டாஸ்இன் போது பேசிய கேப்டன் ஜஸ்பிரித் பும்ரா, "எங்கள் கேப்டன் ஓய்வு முடிவை எடுத்து இருப்பதன் மூலம் அவர் தலைமைப் பண்பை வெளிப்படுத்தி இருக்கிறார். இதுவே அணியில் ஒற்றுமை இருப்பதை உணர்த்துகிறது. இங்கு சுயநலத்திற்கு இடமே இல்லை." "அணிக்கு நன்மை பயக்கும் விஷயங்களை செய்து வருகிறோம். இந்தப் போட்டியில் இரு மாற்றங்கள், ரோகித் ஓய்வு எடுக்கிறார், ஆகாஷ் தீப் காயம் காரணமாக விலகியதால், பிரசித் கிருஷ்ணா அணியில் இணைந்துள்ளார்," என்று தெரிவித்தார். முன்னதாக ஐந்தாவது டெஸ்ட் போட்டி துவங்கும் முன் நடைபெற்ற பயிற்சியின் போது, ரோகித் சர்மா மற்றும் கவுதம் கம்பீர் பேசிக் கொள்ளவில்லை என்று தகவல்கள் வெளியாகின. மேலும், பயிற்சி முடிந்த பிறகு ரோகித் சர்மா மைதானத்தில் இருந்து வேறொரு வாயில் மூலம் வெளியேறி அணி பேருந்தில் ஏறியதாக கூறப்பட்டது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.